පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்

**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொடர் தொலைக் கல்வி நிலையம்

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

පළමු වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය)
අගෝස්තු 2018

முதலாம் வருட கலைத்தேர்வு பரீட்சை ( வெளிவாரி - புதிய பாடத்திட்டம்)
ஆகஸ்ட் 2018

1st YEAR (100 LEVAL) EXAMINATION IN BACHELOR OF ARTS
(EXTERNAL - NEW SYLLABUS) AUGUST 2018

# SUPE 014

## Writing Skills in Tamil

(இவ்வினாத்தாளில் ஏழு வினாக்கள் உள்ளன.
முதலாம் பகுதியில் உள்ள மூன்று வினாக்களுக்கும்
இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும்
மூன்றாம் பகுதியிலிருந்து ஒரு வினாவுக்கும்
எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.)
எழுத்துத் தெளிவில்லாதவிடத்துப் புள்ளிகள் குறைக்கப்படும்

நேரம்: **மூன்று மணித்தியாலம்**

---

## பகுதி I

01. [illegible] ஒரு தலைப்பைத் [illegible] 300-350 [illegible] கட்டுரை எழுதுக.

அ. மதச் சார்பற்ற அரசு

ஆ. பெண் கல்வியும் தேசிய அபிவிருத்தியும்

இ. மொழித்திறன் விருத்தியில் வாசிப்பின் முக்கியத்துவம்

ஈ. சுற்றாடலைப் பேணுவதில் பொதுமக்களின் பங்கு

உ. எண்ணமே வாழ்வு

ம.ப.பா.

02. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதனை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

மொழி கற்பித்தலின் மூன்று பிரிவுகளாகிய வாய்மொழி, படிப்பு, எழுத்து ஆகியவற்றுள் வாய்மொழியே மிகவும் முக்கியமானது. மொழிப் பயிற்சியின் முதற்படியும் இதுதான். வாய்மொழிப் பயிற்சியே பேசுவதற்கு அடிப்படை. பேசுவதே படிப்பதைவிடவும் எழுதுவதைவிடவும் விரைவாகவும் எளிதாகவும் கைவரக்கூடியது. பேசுதல், படித்தல், எழுதுதல் என்பதே மொழி கற்றலில் இயற்கையான முறையாகும். பேசுதல், பேச்சுப் பழக்கத்தால் தான் வரும். ‘செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற பழமொழி ஈண்டு சிந்திக்கற்பாலது. தொடக்க நிலைப் பள்ளியில் வந்து சேரும் இளம் மாணாக்கர்கள் வயதிலும் மன வளர்ச்சியிலும், அறிவிலும் மிகச் சிறியவர்கள். இவர்களிடம் ஓரளவு பேச்சுப் பழக்கம் அமைந்திருக்கும். பெற்றோர் உற்றார், உறவினர், விளையாட்டுத் தோழர்கள் முதலியவர்களுடன் பழகியிருப்பதால் இவர்கள் பேசுவதைக் கேட்டு அறிந்துகொள்ளவும், தமது கருத்துக்களைத் தெரிவிக்கவும் ஓரளவு வாய்மொழிப் பயிற்சியினைப் பெற்றிருப்பர். குழவி நிலையங்களிலிருந்து வந்து சேரும் குழந்தைகள் மிகக்குறைவு. இத்தகைய நிலையங்கள் ஒரு மாவட்டத்துக்கு ஒன்றுகூட இன்னும் ஏற்படவில்லை. எனவே, தொடக்க நிலைப் பள்ளியில் சேரும் குழந்தைகள் பெற்றிருக்கும் பேச்சுப் பழக்கங்கள் யாவும் வீட்டில் பெற்றவையே. ஆதலால், இக்குழந்தைகளின் பேச்சுக்களில் பல குறைகள் காணப்பெறும். தெளிவற்ற பேச்சு, பிழையான உச்சரிப்பு, விடுபட்ட முடிவுகள். வேகமான பேச்சு முதலியன இக் குறைகளாகும். அன்றியும் வீடுகளிலும் தெருக்களிலும் பழகுவதனாலும் குழந்தைகளிடம் பிழையான பேச்சுப் பழக்கங்கள் ஏற்பட்டிருக்கும். எனவே திருத்தமான பேச்சுப் பழக்கங்களை உண்டாக்கவும் தவறான பழக்கங்களை களைந்தெரியவும் வாய்மொழிப் பயிற்சிகள் பள்ளியில் தரப்பெறுகின்றன. பள்ளிக்கு வரும் மாணவர்கள் யாவரும் ஒரே மாதிரியான திறமையுடன் இரார். படித்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் சொல்வளம் செழுமையாக இருக்கும். படிக்காத குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் சொல்வளம் நலிந்து காணப்பெறும். நகர்ப்புறங்களில் வாழும் குழந்தைகளின் சொல்வளம் ஒருவிதமாகவும், நாட்டுப்புறங்களில் வாழும் குழந்தைகளின் சொல்வளம் வேறொரு விதமாகவும் இருக்கலாம். அன்றியும், சென்ற தலைமுறைக் குழந்தைகளின் சொல்வளத்தை விட இத்தலைமுறைக் குழந்தைகளின் சொல்வளம் அதிகம் என்பதை அனுபவத்தில் ஆசிரியர்கள் அறிவர். எனவே ஆசிரியர்கள் தம்மிடம் வரும் குழந்தைகளின் திறனையும் அறிந்து வாய்மொழிப் பயிற்சிகளை அளிக்கவேண்டும்.

ம.ப.பா.

03. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தனது கருத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்தும் கருவியே மொழியாகும். மனிதன் வாழ்வோடு வாழ்வாய்ப் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வருவது மொழியாகும். மொழி இல்லையேல் சிந்தனையால், எண்ணத்தால், பண்பாட்டுச் சிறப்பால் மனிதன் வளர்ச்சியடைய வாய்ப்பில்லாமல் போய் இருக்கும். மொழி என்றதும் எழுத்துவடிவத்துடன் இலக்கிய, இலக்கணங்களை உடையதுதான என்ற நினைவு அனைவருக்கும் வரும். எழுத்து வடிவமில்லாது பேச்சு வழக்கில் மட்டும் பயின்று வரும் ஆயிரக் கணக்கான பழங்குடி மொழிகளும் நம் நாட்டில் உண்டு. ஒரு மொழி பரந்த பரப்பில் பேசப்படும்பொழுது அதில் வேறுபாடுகள் காணப்படுதல் இயற்கையாகும். கிளைமொழி (dialect) என்பது ஒரு குறிப்பிட்ட பேச்சு மொழியின் வகையைக் குறிப்பதாகும். ஒரு தனி மனிதர் பேசும் பேச்சு வழக்கை 'Idiolect' என்பர். அதாவது இதைத் 'தனி மனிதப் பேச்சு வழக்கு' என்று குறிப்பிடலாம். பல தனி மனிதப் பேச்சு வழக்குகள் ஒரு கிளை மொழியையும், பல கிளைமொழிகள் சேர்ந்து ஒரு மொழியையும் உருவாக்குகின்றன. **மொழிக்குடும்ப** (language family) வரலாற்றிற்கு மொழியும் (language) ஒருமொழி வரலாற்றுக்குக் (History of language) கிளை மொழி ஆய்வும் (Dialect study)மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றது. என்வேதான், தமிழ் மொழி வரலாற்றைப் பற்றி ஆராயும் பொழுது, தமிழ்க் கிளை மொழிகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் ஆராய வேண்டியுள்ளது. மக்கள் சிறு சிறு குழுக்களாக வாழும்போது மலை, ஆறு, கடல் போன்ற இயற்கையமைப்பால் பிரிக்கப்பட்டு அவர்களிடையே அதிகத் தொடர்பின்றி வாழவேண்டிய நிலை ஏற்படுகிறது. இலங்கையும் இந்தியாவும் கடலால் பிரிக்கப்பட்டிருப்பதால், இவ்விரண்டு இடங்களிலும் பேசும் தமிழ் மொழியில் மிகுந்த வேறுபாட்டைக் காணலாம். செய்தித் தொடர்பில் குறுக்கீடுகள் (interferences) அதிகமானாலும் மொழியில் மாற்றங்கள் ஏற்படும். கிளை மொழியை வழங்கும் இடம் பற்றி வட்டாரக் கிளைமொழி (Regional Dialect) என்றும், பேசுகின்ற மக்களின் சமூகநிலை பற்றிச் சமூகக் கிளைமொழி (Social Dialect) என்றும் கூறுவர். பேச்சு மொழியை வரிவடிவத்தில் அளிக்கும்போது அதனைப் பார்வைக் கிளைமொழி (Eye Dialect) என்றும் கூறுவர். ஒரே மொழி வட்டாரத்திற்கு வட்டாரம், சாதிக்கு சாதி தொழிலுக்குத் தொழில் வேறுபட்டாலும் கூட அவற்றிடையே ஒரு பொதுத் தன்மையைக் காண்கிறோம்.

ம.ப.பா.

(1) இவ்வுரைப் பகுதியின் பிரதான கருத்து யாது?

(2) மனித எண்ணத்தின் வளர்ச்சியில் மொழியின் பங்களிப்பு எவ்வாறு அமைகின்றது?

(3) ஒரு மொழி எவ்வாறு உருவாகின்றது என்பது பற்றிக் கட்டுரையாசிரியர் கூறுவது யாது?

(4) பின்வருவனவற்றுள் ஆசிரியருடைய கருத்துக்கு பொருத்தமான கூற்று எது?

அ) கிளைமொழிகள் இயற்கை அமைப்பால் வேறுபடுகின்றன.

ஆ) கிளைமொழிகள் செய்தித் தொடர்பு குறுக்கீடுகளால் வேறுபடுகின்றன.

இ) கிளைமொழிகள் தனிமனிதப் பேச்சு வழக்குகளினால் வேறுபடுகின்றன.

ஈ) கிளைமொழிகள் தனிமனிதப் பேச்சு வழக்குகளினால் வேறுபடுகின்றன.

**அல்லது**

மேல்வரும் கவிதையை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

தோடம பழச்சுளைபோல் தொங்கும் நிலவொளியில,
ஆட வருவாயென்று, ஆற்றோரம்
ஓடத்தே
நான்காத் திருந்தேன் நடுச்சாம மாமட்டும்;
ஏன்காக்க வைத்தாய் எனை?

எண்ணத்தில் எல்லாம் எலுமிச்சைப் பூச்சிரிப்பே;
கண்ணிறையச் காணுவதுன் கட்டழகே;
எண்ணில்லா
[illegible] ற்றிருக்கும்
வெண்ணிலவை
எள்ளி நகைக்கும் எழில்.

வெண்டா மரைக்குள்ளே. வீழ்ந்துருளும் நீலநிற
வண்டாய், விழியாலிவ் வானத்தைக்
கண்டாலே
என்னை நினைக்கா திருக்க இசைவாயோ?
என்னே இதயம் இரும்பு! ம.ப.பா.

தக்காளிக் கன்னங்கள் மிக்க சிவப்பேறப்
பக்கத் திருந்திசை நீ பாடுங்கால்...
துக்கமுற்று
சித்தம் குழம்பிச் செயலிழந்து மாமரத்தின்
கொத்துள் குமையும் குயில்!

(அ) இக் கவிதையில் வெளிப்படும் உணர்ச்சி யாது?

(ஆ) அந்த உணர்ச்சியை கவிஞர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?

(இ) கவிஞரின் புதிய படிமச் சித்திரிப்பை விளக்குக.

(ஈ) என்னை நினைக்கா திருக்க இசைவாயோ?
என்னே இதயம் இரும்பு!- என்ற அடியினூடாக நீர் விளங்கிக்கொள்வது யாது?

## பகுதி II

04. பின்வரும் வாக்கியங்களில் தேவையான இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறியீடுகளை இட்டுத் திருப்பி எழுதுக.

(அ) அண்ணன் தம்பி வீட்டுக்குச் சென்றதால் நான் பார்க்கவில்லை

(ஆ) சு சுந்தரம்பிள்ளை நுழைத்தேர்வில் Entrance Examination முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

(இ) பேராசிரியர் க கைலாசபதி பல்கலைக்கழக ஆசானாக விளங்கியதோடு சிறந்த விமர்சகராக விளங்கினார் சிறந்த பேச்சாளராக விளங்கினார் சிறந்த ஆய்வாளராக விளங்கினார்

(ஈ) அந்தோ பல பழந்தமிழ் நூல்கள் அழிந்தனவே

(உ) விண்ணப்பதாரியின் தாய்மொழியாகத் தமிழ் சிங்களம் இருக்க வேண்டும்

(ஊ) பாரதியார் பாடிய கவிதைகளுள் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி மிக முக்கியத்துவம் வாய்ந்தது

ம.ப.பா.

(எ) இன்னா செய்தாரை ஒறுத்தல் எனத் தொடங்கும் திருக்குறள் நாம் எமக்குத் தீமை செய்வோருக்கும் நல்லதைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது

(ஏ) ஐரோப்பியரின் புத்தாய்வுப் பயணத்துக்குப் போர்த்துக்கல் இளவரசன் ஹென்றி கி பி 1394 1460 உதவி செய்தார்

(ஐ) நவீன மொழியியலாளர் மொழியின் மூன்று நிலைகளுடன் தொடர்புபடுத்தி விவரஞ் செய்வர் அவையாவன ஒலியியல் இலக்கணம் சொற்பொருளியல் என்பனவாகும்

(ஒ) யந்திர நாகரிகமும் பொருட்கவலையும் எல்லோரையும் செல்வர் வறியவர் என்ற வேறுபாடு இல்லாமல் ஆட்டிப்படைக்கும் காலத்தில் நாம்வாழ்கிறோம்

05. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் திணை, பால், எண், மற்றும் வாக்கிய மயக்கம் என்பவற்றின் பிழைகளைச் சுட்டிக் காட்டி, வாக்கியங்களை மீள எழுதுக.

1. கல்வியறிவு இல்லாத மானிட சமுதாயம் அழிவுக்கு இலக்காகிறார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.
2. இலங்கையில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.
3. ஜெயகாந்தன் தான் எழுதிய ஒவ்வொரு நாவல்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.
4. ஜனாதிபதி தேர்தல் அறிவிப்பு வந்த உடனேயே தமிழ் அரசியல் குழுக்கள் போட்டியில் குதிக்க ஆயத்தம் செய்தனர்.
5. அமெரிக்க ஜனாதிபதியும் மற்றும் வடகொரியா ஜனாதிபதியும் சிங்கப்பூரில் சந்தித்துக் கொண்டனர்
6. ஆண்டு தோறும் போரினால் கொல்லப்பட்டவர்களின் நினைவாக மௌன அஞ்சலி செலுத்தப்படும்.
7. கலைத் துறையிலும் அவன் அரசியல் துறையிலும் சிறப்புற்று விளங்கினான்.
8. நீங்கள் அதைப் பொருளாகவோ அல்லது பணமாகவோ திருப்பித் தரலாம்
9. புதிய பாடசாலையின் தொழில்நுட்ப மண்டபத்தில் கூட்டம் நடைபெறும்.
10. தமிழில் முத்தமிழ் என்று சிறப்பிக்கப்படுவது இயல், இசை, நாடகம் என்பதாகும்.

## பகுதி III

06. இலங்கையில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதனால் கலாசாரச் சீர்க்கேடுகளும் வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன. எனவே, இவ்வாறான போதைப் பொருள் பாவனையையும் தடுத்து நிறுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு 150 சொற்களில் கடிதம் எழுதுக.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினுக்குச்** சிறு குறிப்பு எழுதுக.

அ. நடை வகைகள்

ஆ. இதழியலும் மொழியும்

இ. செம்மொழி

ஈ. அறிவியல் தமிழ்

உ. சைகை மொழி